ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2403/03 - 2024 සැප්තැම්බර් මස 23 වැනි සඳුදා - 2024.09.23

*2403/03 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல.: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/1/1.*

### பிரகடனம்

(முத்திரை)

***அநுர குமார திசாநாயக்க***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 31 ஆம் உறுப்புரையின் (3)ஆம் உப உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்பட்ட தேர்தலின் பிரகாரம், கௌரவ அநுர குமார திசாநாயக்க அவர்கள், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் பிரகாரம் சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளாரென இரண்டாயிரத்து இருபத்துநான்காம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இருபத்திரெண்டாம் நாளன்று தேர்தல் ஆணைக்குழுவினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாலும்,

குறித்த அரசியலமைப்பின் 31 ஆம் உறுப்புரையின் (4) ஆம் உப உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதியின் பதவிக்காலம் இரண்டாயிரத்து இருபத்துநான்காம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இருபத்துரெண்டாம் நாளன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாலும்,

குறித்த அரசியலமைப்பின் 32 ஆம் உறுப்புரை மற்றும் 157அ ஆம் உறுப்புரையின் (7) ஆம் உப உறுப்புரையின் பிரகாரம் அரசியலமைப்பின் நாலாம் அட்டவணை மற்றும் ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள உறுதியுரைகளை மொழிந்து ஒப்பமிட்டதன் மூலம் கௌரவ அநுர குமார திசாநாயக்க அவர்கள் இரண்டாயிரத்து இருபத்துநான்காம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இருபத்துமூன்றாம் நாளன்று ஐந்தாண்டு காலத்திற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியாகப் பதவியேற்றார் என்பது இப்பிரகடனத்தினால் அறிவிக்கப்படுகின்றது.

இரண்டாயிரத்து இருபத்துநான்காம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இருபத்துமூன்றாம் நாளன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.

கௌரவ சனாதிபதியவர்களின் ஆணைப்படி,

கலாநிதி **என். எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2024, செத்தெம்பர் 23.

EOG *09-0148*

1A - G 42726 — 359 (2024/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*